by Revenue Divisional Officer of Sivakasi during February–March 1968;

(b) if so, the details thereof; and

(c) the actions taken thereon.

ராஜபாளையம் ராமசாமி ராஜா பல்துறைப் பயிற்சி நிலையம்

திரு. டி. கே. ஷண்முகம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968-ஆம் வருடம் பிப்ரவரி-மார்ச் மாதங்களில் சிவகாசி கோட்டாட்சித் தலைவர் (R.D.O.) அவர்கள் நடத்திய விசாரணையில் ராஜபாளையம் ராமசாமி ராஜா பல்துறைப் பயிற்சி நிலையத்தின் நிர்வாகஸ்தர்களுக்கும், பல உயர்தர போலீஸ் அதிகாரிகளுக்கும் எதிராக மதுரையைச் சேர்ந்த பிரபல கண், ரண வைத்திய டாக்டர் ஒருவர் சாட்சியமளித்தாரா?

(இ) ஆம் எனில், இதன் விவரங்கள் யாவை?

(உ) இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ), (இ) & (உ) அவை முன் அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Punthalangudi firing incident.

* 2. *Q.* THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 35 on 21st February 1968:

(*a*) the date on which the enquiry report of the Revenue Divsional Officer, Mannargudi about the Punthalangudi firing incident was received by the Tamil Nadu Government;

(*b*) the date on which this enquiry report was made available to the Members of the Legislature; and

(*c*) whether there was any delay in making the report available and if so, the reason therefor?

---

a Printed as Appendix I.

[24th August 1970

பூந்தாழங்குடி துப்பாக்கிப் பிரயோகம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 21—2—1968-ஆம் தேதி அன்று 35-ஆம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) பூந்தாழங்குடி துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய மன்னார்குடி கோட்ட ஆட்சியாளரின் (R. D. O.) விசாரணை அறிக்கை தமிழ் நாடு அரசுக்கு எப்பொழுது கிடைத்தது?

(இ) இவ்விசாரணை அறிக்கை சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கு எப்பொழுது வழங்கப்பட்டது?

(உ) அறிக்கை வழங்கப்பட்டதில் காலதாமதமிருப்பின், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) மன்னார்குடி, வருவாய்க் கோட்ட அதிகாரியின் அறிக்கை, 9—10—1967-ல் அரசுக்குக் கிடைத்தது.

(இ) சட்டமன்ற மேலவைத்துறை, இந்த அறிக்கையை 19—7—69-ல் அதன் உறுப்பினர்களுக்கு அனுப்பியது.

(உ) நீதிமன்றத்தில் இது குறித்த ஒரு வழக்கு முடிவுறாமல் இருந்தமையால், இந்த அறிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் முடிவுறாத நிலையில் இல்லாதபோது இந்த அறிக்கையை மேலவை முன் வைக்க, அரசு முடிவெடுத்தது. இந்த அறிக்கையின் முடிவான அச்சடித்த பிரதிகள் அரசுக்கு வரப்பெற்றதும் அவை, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

Prime Minister's Visit.

* 3. *Q.* THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) the total expenditure incurred when the Prime Minister Thirumathi Indira Gandhi toured in Tamil Nadu in the first week of October, 1969; and

(*b*) whether the Tamil Nadu Government have borne the entire expenditure?

இந்தியப் பிரதமரின் வருகை

திரு. வி. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) இந்திய பிரதமர் 1969 அக்டோபர் முதல் வாரத்தில் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபொழுது ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு?

(இ) தமிழ் நாடு அரசு இச்செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டதா?